**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2023 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை</u>

**<u>இ.ம.எண்.02/2022 இன் அ.வ.எண்.180/2022</u>**

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பண்ணைகிணறு கிராமம் மஜரா, கோழிக்குட்டை, கதவு எண்.3/68 என்ற முகவரியில் வசிக்கும் சுமார் 57 வயதுடைய மாரிமுத்து மனைவி திருமதி.ரத்தினம்.

... மனுதாரர்/வாதி

/ எதிர் /

1) பொள்ளாச்சி வட்டம், சீலக்காம்பட்டி அஞ்சல், சீ.மலையாண்டிபட்டணம், போஸ்ட் ஆபிஸ் அருகில் வசிக்கும் சுமார் 55 வயதுடைய திரு.குமாரசாமி கவுண்டர் மகன் திரு.தங்கவேல்.

2) பொள்ளாச்சி வட்டம், சீலக்காம்பட்டி அஞ்சல், சீ.மலையாண்டிபட்டணம், போஸ்ட் ஆபிஸ் அருகில் வசிக்கும் சுமார் 55 வயதுடைய திரு.தர்மலிங்க கவுண்டர் மகன் திரு.ஞானசேகர். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்புச் செய்துள்ள மனு பி,சி செட்யூல் சொத்துக்களில் மேற்கொண்டு அபிவிருத்தி, கட்டுமானம் எதுவும் செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 20.04.2022

இம்மனுவானது கடந்த 03.01.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.தங்கரத்தினம் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.A சுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டும் இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட

வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## இறுதி உத்தரவு

1. முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுச்சொத்துக்கள் உள்ளது உள்ளபடியே தொடரவேண்டும் எனவும், எதிர்மனுதாரர்கள் மனு பி,சி செட்யூல் சொத்துக்களில் மேற்கொண்டு எவ்வித அபிவிருத்தி, கட்டுமானமும் செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

## சொத்துவிபரம்

**ஏ செட்யூல்:**

திருப்பூர் பதிவு மாவட்டம், கோமங்கலம் சார்பதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், சீ.மலையாண்டிபட்டணம் கிராமம் க.ச.118/B1 நெ காலை நத்தம் சீ.மலையாண்டிபட்டணம் ஊர்க்கட்டில், கிழமேல் பொது சந்துக்கும் காளியப்பவுண்டர் வீட்டுக்கும் வடக்கு, கிழமேல் வீதிக்கும் நத்தம் காலியிடத்துக்கும் தெற்கு, தென்வடல் வீதிக்கும் கிழக்கு, ஞானசேகர் வீட்டுக்கும் மேற்கு, இதன் மத்தயில் தென்புறம் கிழமேல் மீட்டர் 11.8, மேல்புறம் தெற்கோட்டிலிருந்து வடக்கு நோக்கி தென்வடல் 8.4 மீட்டர், அதிலிருந்து கிழக்கு சாயலாக 1.2 மீட்டர், அதிலிருந்து வடக்கு நோக்கி தென்வடல் 4.0 மீட்டர், அதிலிருந்து கிழக்கு நோக்கி கிழமேல் 4.0 மீட்டர் அதிலிருந்து வடக்கு நோக்கி தென்வடல் 1.6 மீட்டர், அதிலிருந்து கிழக்கு நோக்கி கிழமேல் 3.6 மீட்டர் அதிலிருந்து தெற்கு நோக்கி தென்வடல் 4.00 மீட்டர், அதிலிருந்து கிழக்கு நோக்கி கிழமேல் மீட்டர் 3.4 மீட்டர், அதிலிருந்து தெற்கு நோக்கி தென்வடல் 9.2 மீட்டா இந்த அளவுகள் கொண்ட 145.0 சதுர மீட்டர் காலியிடம்,மேற்படி இடத்துக்குண்டான மாமூல தட பாத்தியம் சகிதம். மேற்படி இடம் நத்தம் அப்டேட்டிங் சர்வே படி மனைவரி பட்டா எண் 309 க.ச.304/9 நெ காலை 145.0 சதுரமீட்டருக்கும் புதிய நத்தம் எண் 118/B1A நெ காலைக்கும் கட்டுப்பட்டது.

**பி செட்யூல்:**

திருப்பூர் பதிவு மாவட்டம், கோமங்கலம் சார்பதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், சீ.மலையாண்டிபட்டணம் கிராமம் ஏ செட்யூல் சொத்துக்களின் வடபுறப்பகுதி க.ச.118/B நெ காலை நத்தம் சீ.மலையாண்டிபட்டணம் ஊர்க்கட்டில்,

| | |
|---|---|
| மேற்கண்ட ஏ செட்யூல் இதர சொத்துக்களுக்கும் | ... வடக்கு, |
| கிழமேல் வீதிக்கும் | ... தெற்கு, |
| தென்வடல் வீதிக்கும் | ... கிழக்கு, |
| 304/7 ஞானசேகர் வீட்டுக்கும் | ... மேற்கு |

இதன் மத்தியில் மேல்புறம் தெற்கிருந்து வடக்கு நோக்கி தென்வடல் 4.0 மீட்டர், அதிலிருந்து கிழக்கு நோக்கி கிழமேல் 4.0 மீட்டர், அதிலிருந்து வடக்கு நோக்கி தென்வடல் 1.6 மீட்டர், அதிலிருந்து கிழக்கு நோக்கி கிழமேல் 3.6 மீட்டர் அதிலிருந்து தெற்குநோக்கி தென்வடல் 4.0 மீட்டர், அதிலிருந்து கிழக்கிருந்து மேற்காக 7.6 மீட்டர் இந்த அளவுள்ள 27 சதுரமீட்டர் மனையிடம் புதிய நத்தம் எண் 118/B1A காலைக்கு கட்டுப்பட்டது.

**சி செட்யூல்**

திருப்பூர் பதிவு மாவட்டம், கோமங்கலம் சார்பதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், சீ.மலையைாண்டிபட்டணம் கிராமம் ஏ செட்யூல் சொத்துக்களின் கிழபுறப்பகுதி க.ச.118/B1 நெ.காலை நத்தம் சீ.மலையாண்டிபட்டணம் ஊர்க்கட்டில்,

மேற்கண்ட ஏ செட்யூல் இதர சொத்துக்களுக்கும் வடக்கும் கிழக்கும்,

புல எண் 304/10 ல் ஞானசேகர் வீட்டுக்கும் தெற்கும், மேற்கும்

இதன் மத்தியில் வடபுறம் மேற்கிருந்து கிழக்கு நோக்கி கிழமேல் மீட்டர் 3.4 மீட்டர், அதிலிருந்து தெற்கு நோக்கி தென்வடல் 7.8 மீட்டர், அதிலிருநது மேற்கு நோக்கி கிழமேல் 3.7 மீட்டர், அதிலிருந்து வடக்கு நோக்கி 8.2 மீட்டர் இநத

அளவுகள் கொண்ட 28 சதுர மீட்டர் மனையிடம், புதிய நத்தம் எண் 118/B1A காலைக்கு கட்டுப்பட்டது.

இவ்வுத்தரவு 2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------

**இறுதி உத்தரவு**

ஐ.ஏ.02/2022 இன் ஓ.எஸ்.180/2022
நாள்: 10.01.2023
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

-----------------------------------